# தொடரும் போரினால் அரசுக்கு பாரிய நிதி நெருக்கடி

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 10 இதழ் 197
யாழ்ப்பாணம் புதன்கிழமை 26 — 08 — 1992

(கொழும்பு)
வடக்கு-கிழக்குப் பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வரும் போரினால் சிறிலங்கா அரசு பாரிய நிதிநெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தினால் நாட்டில்
(4-ம் பக்கம் பார்க்க)

## அலம்பில் மோதலில் ஏழு படையினர் பலி

(கொழும்பு)
முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பலியானோரின் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன
(4ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலையத்தில் தமிழ் மகன் கொலை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு காரைதீவு பொலிஸ்நிலையத்தில் வைத்து தமிழ்ப் பொதுமகன் ஒருவர் கடந்த வாரம் கொலைசெய்யப்பட்டுள்ளார்.
மட்டக்களப்பு காரைதீவுப் பகுதியில் வீதியால் செல்லும் தமிழ் மக்கள் பொலிஸாரால்
(4ம் பக்கம் பார்க்க)

# ★ மட்டு. மாவட்டத்தில் இராணுவநடவடிக்கைகளினால் 18,000 வீடுகள் முற்றாக சேதம்

## அடிப்படை வசதிகளின்றி தமிழர் பாதிப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும், முஸ்லிம் குழுக்களாலும் மற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ மற்றும் அழிவு நடவடிக்கையினால் தமிழருக்கு சொந்த 18,614 வீடுகள் முற்றாக சேதமடைந்தும் 2,4815 வீடுகள் ஓரளவு சேதமடைந்தும் உள்ளதாக அண்மைய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.
(4ம் பக்கம் பார்க்க)

## ஒபரேஷன் பூகம்பம் - II குறித்து தகவல்தர மறுப்பு

(கொழும்பு)
'ஒபரேசன் பூகம்பம்-II இராணுவ நடவடிக்கை குறித்துத் தகவல்களை வெளியிட இராணுவம் மறுத்துள்ளது.
விரைவில் இந்த நடவடிக்கை ஆரம்பமாகும் எனவும், எந்தப் பகுதியில் இது ஆரம்பிக்கப்படும் எனக் கூறவும் கூட்டுப் படைத் தலைமையகம் மறுத்துள்ளது.
இதேவேளை போதியளவு படையினர் வடபகுதியில் குவிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## தமிழரிடமிருந்து புலிகளை தனிமைப்படுத்த இயலாது

(கொழும்பு)
தமிழ் மக்களிடமிருந்து விடுதலைப்புலிகளைத் தனிமைப்படுத்த இடலாது என்று பெயர் குறிப்பிடவிரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
தமிழ் மக்களிடமிருந்து விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்திவிட்டு தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாணமுடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
புலிகளைத் தனிமைப்படுத்தும் யோசனை மேலும் சிக்கலை ஏற்படுத்துமே தவிர தீர்வைப் பெற்றுத்தரமாட்டாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
தமிழ் மக்களிடமிருந்து புலிகளைத் தனிமைப்படுத்திவிட்டு தமிழர் பிரச்னைக்கு அரசியல்தீர்வு காணவேண்டும் என்று தமிழ்குழுக்கள் அரசுக்கு ஆலோசனை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## கலிபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்
பூநகரி, கல்முனைப்பகுதிகளில் நிலைகொண்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் நள்ளிரவு கொழும்புத்துறை பகுதி நோக்கி 50 கலிபர் தாக்குதலை நடாத்தியுள்ளனர்
இத்தாக்குதலையடுத்து இப்பகுதிமக்கள் ஆயிரக்கணக்கில்
(4ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

(வட்டுக்கோட்டை)
காரைநகரில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், நேற்று அதிகாலையில் மூளாய், பொன்னாலை திருவடி நிலைப் பகுதியை நோக்கிச் சரமாரியான ஷெல தாக்குதல்களை மேற்கொண்டனர் இடையிடையே கலிபர் தாககுதல்களும் இடம்பெற்றன.
இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல் குண்டுகள், திருவடிநிலை, பொன்னாலை, மூளாய் பகுதிகளைச் சேர்ந்த கரையோரங்களில் விழுந்து வெடித்தன. [139-ரி]

## வவுனியா அபிவிருத்திக்கு 200 கோடி ரூபா ஒதுக்கீடு

(வவுனியா)
வவுனியா நகர் பகுதியில் புனர் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கென இருநூறு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு எடுத்து வருவதற்கு தடைசெய்யப்பட்டிருந்த விவசாய உபகரணங்களை எடுத்து வருவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அனுமதி அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சு - ரி)

## புலிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடரும்

(சென்னை)
தமிழகத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடர்ந்து நடைபெறும் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக நேற்று அவர் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை மாநில அரசு
(4ம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகளுக்கு பிரிட்டன் 4 கோடி ரூபா உதவி

(கொழும்பு)
இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழ அகதிகளுக்கும், வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள தமிழ் அகதிகளுக்கும் மீளக் குடி அமர்வு மற்றும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் எனப் பிரிட்டிஷ் அரசு 4 கோடி 20 லட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.
யுத்தத்தினால் இன்னலுறும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி வழங்கவேண்டும் என்ற வேண்டுகோளை, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் விடுத்திருந்தத்
(4ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை முடிவுகள்

(கொழும்பு)
1992ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) விசேட பரீட்
(4ம் பக்கம் பார்க்க)

## நல்லூர் கந்தசுவாமி இன்று தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)
சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.
அதிகாலை 4 மணிதொடக்கம் 5 வரை விசேட பூசைகள் நடைபெற்று 6 மணிக்கு வசந்தமண்டபபூசை, கொடித்தம்பப்பூசை இடம்பெற்று ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் காட்சி அளிப்பார்.
இன்று காலை 7 மணிக்கு சித்திரத் தேரில் ஆறுமுகப் பெருமாள் வீதி உலாவரவுள்ளார் நாளைக்காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். (56)

## இனப்பிரச்னையை பிரேமாவே தீர்த்துவைக்கவேண்டும்

(கொழும்பு)
இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் பொறுப்பு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவிடமே இருக்கிறது. என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.
ஒற்றையாட்சியின்கீழ் இறைமைக்கு பாதகமின்றி இனப்பிரச்னைக்கு தீர்வுகாணப்படவேண்டுமானால் அதன்
(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவித மான இந்திய இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ் ஞான கலை இலக்கிய, சோதிட நூல்களைதெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல் லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### சோதிடம்

Anpugee, Shyanbugee 09-09-1992 வரை தனித்துவ மாக இயங்குகின்றது. 29-10-1992 ற்குப் பின்னர் ''Russiva'' எமக்காக விரதம் அனுஷ்டிப்போருக்கு மட்டும். 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ். நகர். (சி-6724)

### விற்பனைக்கு

கந்தபுராணம், உற்பத்தி காண்டம் உரையுடன், ஆறு படை வீடுகளின் கந்தன்புகழ் (சஷ்டி) கவசம் ரூபா 9/50. கிடைக்குமிடம், ஸ்ரீகாந் புத்தகசாலை. நல்லூர், ஸ்ரீகாந்தா புத்தகசாலை, காங் கேசன்துறை வீதி, யாழ்ப் பாணம். (எ-2371)

### "புதிய கலை"

அமரர் V. செல்வநாயகம் அவர்களின் ஸ்ரீதரபவனம் இல்லத்திலிருந்தோ வேறு இடங்களில் இருந்தோ இயங் கிய அனைத்தும் Russiva என்ற அமைப்பாக மாற்ற உள்ளது. E.V.K. Anpalagan. (சி-6723)

### பாட்டுப் பாடவா?

தமிழ்நாடரசு சிறுவர் இலக் கியப் பண்ணை பயிற்சியாளர் கலைமாமணி, கவியரசர் டாக் டர் இளங்கம்பன். இலங்கை செந்தமிழ்ப் பாலர்களுக்காக இயற்றிய 'குழந்தைப் பாடல் கள்' ரூபா 25-00. அஷ்ட லக்ஷ்மி புத்தகசாலை. நல்லை ஆதீனம், நல்லூர். (சி 6711)

### புதிய வகுப்புகள் (ஆண்டு 5)

ஆண்டு 4 மாணவர்களுக்கு திறமை அடிப்படையில் இரண்டு பிரிவாகப் பிரிக்கப் பட்டு புலமைப் பரிசில் முன் னோடி வகுப்புகள் ஆரம்ப மாகியுள்ளன. ஆண்டு 5 மாண வர்களுக்கு பிரபல பாடசாலை களுக்கான அனுமதிப் பரீட் சைக்கான முன்னோடி வகுப்பு கள் ஆரம்பமாகியுள்ளன. புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (.சி-6727)

### முருகன் தமிழ் அர்ச்சனை மலர்

தேர்த் திருவிழாவை முன் னிட்டு நல்லூர் கோவில் வாசலில் அமைந்திருக்கும் அண்ணா தொழிலகத்தாரின் விளம்பர நிலையத்தில் அண்ணா உற்பத்திப் பொருட்களை வாங்கி முருகன் அர்ச்சனை மலரை இனமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். (எ-2389)

### விற்பனையாகின்றது

நாடறிந்த எழுத்தாளர் நவேந்தன் எழுதிய மான வீரன் கும்பகருணன் விலை ரூபா 25/- மற்றும் குழந்தைக் கவிஞர் க. துரைசிங்கம் எழு திய அனைத்து நூல்களுக்கு பாலாஜி புத்தகசாலை. நல்லை ஆதீனம். (சி-6731)

### பாலாஜி புத்தகசாலை நல்லை ஆதீனம்

ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்கள் இந்தியா நாவல்கள் சமய சஞ்சிகைகள் சிறுவர் களுக்கான புத்தகங்கள் மற் றும் பல. பாலாஜி புத்தக சாலை, நல்லை ஆதீனம், நல் லூர். (சி-6732)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் பழுதடைத்து விட்டனவா? முழு உத்தர வாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன் பாக) யாழ்ப்பாணம். (சி-6733)

### தேவை

1972 - 1992 வரை அன்புஜீ யின் தமிழ் அன்புக்குரல் பத திரிகைகள், புஸ்தகங்கள் தேவை. பணம் வழங்கப் படும். E. V. K. Anpalagan, 50/44, வைரவர் கோவில் வீதி, யாழ்ப்பாணம். (எ 6734)

### தவறிவிட்டது

சுப்பிரமணியம் சச்சிதா னந்தன் ஆகிய எனது அடை யாள அட்டை யாழ். ஆஸ் பத்திரிக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள் ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கும். (சி-6735)

### புனித ஆரோக்கியநாதர் திருநாள (யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் புனித ஆரோக்கியநாதர் திருநாள் நாளை வியாழக்கிழமை நடை பெறும். காலை 6-30 மணிக்கு திருநாட் திருப்பலி பூசையும், புனிதரின் திருச்சொரூப சுற் றுப்பிரகார பவனியும் நடை பெறும். (இ)

## இராசி பலன்

26-08-1992

புதன்கிழமை

(தமிழுக்கு ஆவணி 10)

திரயோதசி பி ப 1-58வரை பூசம் பி.ப. 4-22வரை. சித்த யோகம், இராகுகாலம் பகல் 12-05 முதல் 1.35 வரை, சுப நேரம் மாலை 4-35 முதல் 6-05 வரை.

மேடம்: பெண்வகைத் தொல்லை, வயிற்றுக் கோளாறு, செலவு

இடபம்: ஆடம்பரபிரியம், தனலாபம், பயணம்

மிதுனம்: பெரியோர்சிந்தை, பயணதுன்பம், சோம்பல்.

கடகம்: வியாபாரமேன்மை, தெய்வபக்தி, நண்பர் உதவி,

சிங்கம்: உடல் உபாதை மனக்கஷ்டம், வெறுப்பு.

கன்னி: புதிய சகவாசம் வேண்டியவை அடைதல், தியாகம்.

துலாம்: தொழில் உறவு, சுபகாரியம், இனியசெய்தி.

விருச்சிகம்: தூரத்து உறவு, எதிரிகள்பகை, ஏமாற்றம்.

தனுசு: மனச்சங்கடம், விதண்டாவாதம், பணமுடை.

மகரம்: விருந்துண்ணல் பணியாள் உதவி, தெய்வீக சிந்தனை.

கும்பம்: குடும்ப நன்மை, புதியசிந்தனை, இனசன உதவி,

மீனம்: வீண்கலக்கம், புத்தி ரர் கவலை, குடும்பபிரிவு.

— ஜோஸ்யர்

### நல்லூர் தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசை நிகழ்ச்சி

பாட்டு; என். வி. எம். நவரத்தினம், வயலின்: வி. கே. குமாரசாமி, மிருதங்கம்: எம். சிதம்பரநாதன்.

கிரிக்கெட்

## இங்கிலாந்து வெற்றி

(லண்டன்)

பாகிஸ்தானுக்கு எதிரான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரில் இங்கி லாந்து அணி 4-1 என்ற ரீதி யில் வெற்றிபெற்றுள்ளது.

ஒல்ட்ரவற் மைதானத்தில் நடைபெற்ற 5வது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக்கெட் வித்தியா சத்தில் வெற்றிபெற்றது.

ஸ்கோர் விபரம்: பாகிஸ் தான் 55 ஓவரில் 254 ஓட் டங்கள். இங்கிலாந்து 43.4 ஓவரில் 255 ஓட்டம். சி)

துன்பத்தைத் துரத்தி துயர்களை விலக்கி
அன்பரைக் காப்பாய் அருட்பெரு முருகா!




★ ரேஸ்ரிப் பிரியர்களுக்கு

## ஒரு நற்செய்தி!

கீழ்வரும் முகவரியில் அமைந்துள்ள எமது விற்பனை நிலையத்தில், சகல ரேஸ்ரிப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

## வேலுப்பிள்ளை அன்சன்ஸ்

50. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (ஏ 2377)

சைவ வித்தியாவிருத்திச் சங்க

## சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தவர்

வருவாய்க்காக இயங்கிவரும்

★ **விவசாயப் பண்ணை**

(மரக்கறிகள், மரக்கறி பழவிதைகள், நாற்றுக்கள், ஒட்டு நாற்றுக்கள்.)

★ **உணவு வழங்கல் சேவை**

(பாண், பனிஸ், பிஸ்கட், மதியபோசனப் பார்சல், சிற்றூண்டி வகைகள், ஜாம் பழப்பாகு, ஊறுகாய், அச்சாறு, வடகம் போன்ற தயாரிப்புக்கள், மேலும் விசேட வைபவங்களுக்கான உணவு வழங்கல் ஒப்பந் தங்கள்.)

★ **ஆடை தையலகம்**

(பள்ளிக்கூட மாணவர் சீருடை மற்றும் பெண் களுக்குரிய ஆடைவகைகள்) ஆகியவற்றுக்கு ஆதர வும் ஊக்கமும் தாருங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

பொதுமுகாமையாளர்
சைவவித்தியா விருத்திச் சங்கம்

கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (எ-2390)

உ

# திருமண அழைப்பு

இடம்: சாவகச்சேரி துர்க்கையம்மன் தேவஸ்தானம்
காலம்: 30-8-92 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 7-21 தொடக்கம் 9-07 வரை
(கன்னி லக்கின சுபவேளையில்)

எமது ஜ்யேஷ்ட புத்திரன்
சிரஞ்ஜீவி
**குணேஸ்வரசர்மாவிற்கு**

எமது புத்திரி
செள்பாக்கியவதி
**சுகர்ணவை**

மாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

ப. குகனேஸ்வர சர்மா
குடும்பத்தினர்
வரணி.

ந. சபாரத்தினக் குருக்கள்
குடும்பத்தினர்
சாவகச்சேரி.

வரவேற்பாளர்கள்: ச. ஸ்ரீநந்தன சர்மா
ச. ஸ்ரீசந்தன சர்மா
ச. ஸ்ரீகுகந்தன சர்மா


(சி-6721)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
04-09-1981

உதிர்வு
26-08-1991

திதி
13-09-1992



## செல்வன் சுவாமிநாதன் துஷிந்தன்

எத்தனை எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டகலாது.
உங்கள் ஆத்மா சாந்திக்கு
பிரார்த்திக்கிறோம்.

தகப்பன், தாய், சகோதரி
உற்றார், உறவினர்கள்.

மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை. (சி-6730)

★ நல்லூர் கந்தசுவாமி கோவில் ரதோற்சவ சிறப்பு மலர் ★

# தேரேறி வரும் கந்தன் தீராத வினை தீர்ப்பான்!

எஸ்.கே.யோகநாதன்

'முருகு' என்றால் அழகு என்பார்கள். அழகுத் தெய்வத்தை முருகன் என்றனர் ஆன்றோர். முருகன் அழகன் இளையவன் தெய்வத்தன்மையும் மணமும் பொருந்தியவன். அவன் தமிழ்க்கடவுள். கலியுகவரதன், இந்நாளிலே முருகனை வணங்காதவர் யாருளர். முருக வழிபாடு இன்று பரந்து விரிந்திருக்கிறது. "பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு நீலமயிலினில் வீதிவலம் வரும் மயில்வாகனன்" வழிபடுவோர்க்கு வரையாது வாரி வழங்கும் வள்ளல். அவனை அடைந்தார்க்கு இல்லை வினை. வேலை வணங்குவதே நமக்கு வேலை. வேலை வணங்காது வேறென்ன வேலை என்றார் ஓர் அறிஞர்: உண்மைதான். நல்லூரில் மூலஸ்தானத்தில் வேல் உண்டு. இது கூர்த்த ஞானத்தையுணர்த்தும் வேல்: நல்வினை தீர்க்கவல்லது. இருபத்தைந்து தினங்களும் இந்திரலோகம் எனக் காட்சி தரும் நல்லையின எல்லையில் கால் மிதித்தாலும் வினை மாளும். நல்லையின் நாயகனை நாளும் ஆசார சீலராக விரதம் அனுஷ்டித்து எப்போதும் வழிபட்டு உணர்ந்து உருகிக் கண்ணீர் கசிந்து தமிழோடு இசை பாடின் அருள் கிடைக்கும் என்பர்.

சரித்திரப் பிரசித்தியும், தொன்மையும் வாய்ந்த நல்லை நகரில் கோயில் கொண்ட கலியுகவரதன், தமிழ் மக்களின் தனிப்பெருந் தெய்வம். அழகிய கலைக்கோயிலாகக் காட்சியளிக்கும் நல்லூர் ஆலயம் அமைந்த இடம் புனிதமான பிரதேசமாகும். இங்கு ஞானியர் பலர் நடமாடி இறையருள்பெற்றுள்ள சித்தர்களும், பக்தர்களும் நல்லூரான் கருணையை நாடி அங்கு கூடுவார்கள் கடையிற் சுவாமிகள் நடமாடி அருள்பெற்று மகிழ்ந்த நிலையில் ஒரு சித்தர் பரம்பரையை உருவாக்கியுள்ளார். ஓர் ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்களில் தேர்த் திருவிழா மிகச் சிறப்பானது. தேரும், தேரோடும் வீதியும் தேரடியும் புனிதமானவை, நல்லூர்த் தேரடியில் தவம், செபம், தியானம் என்பவற்றில் ஈடுபட்டவர்கள் செல்லப்பா சுவாமிகளும், சிவயோகசுவாமிகளும் ஆவர். செல்லப்பா சுவாமிகளை நல்லூர்த் தேரடியில் யோகர் சுவாமிகள் கண்டு தரிசித்தார்.

'நல்லூர்த் தேரடியில் எங் குருவைக் கண்டேன்' 'தேரடியில் தேசிகனைக் கண்டு தரிசித்தேன்' என்றும் சிவயோக சுவாமிகள் தமக்குக் கிடைத்த குருவருள் பற்றி கூறியுள்ளார். கரங்கூப்பிச் சிரந்தாழ்த்திக் கந்தனை வலம் வந்தால் பிறவிப் பிணி தீயிற்பட்ட பஞ்சு போல் அற்றுப் போய்விடும் என்பது ஆன்றோர் கூற்று. "எந்நாளும நல்லூரை வலம் வந்து வணங்கினால இடர்கள் எல்லாம் போமே" என்பது யோகர் வாக்கு அவரே "நல்லூரை கும்பிட்டு நீ பாடு அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும், என்று அவரது நற்சிந்தனையில் கூறியுள்ளார். கடந்த ஐந்நூறு வருடங்களாக கோடானுகோடி இதயங்களிலே வற்றாத முற்றாத அணிகலங்கொண்டு திகழ்கின்றான் நல்லூர்ப் பெருமான். தேரேறுவதற்கு வசந்த மண்டபத்திலிருந்து பெருமான் புறப்படுகிறார். ஆர்ப்பரித்து எழுந்த திரைகள் மோதும் சமுத்திரத்திலே செல்லும் பாய்க் கப்பல் போல் நல்லூர் ஆறுமுகன் பக்கங்களில் பின்னும் முன்னுமாக நிரம்பிய மனிதசமுத்திரத்திலே நீந்தி வந்து தேரில் ஆரோகணித்துக் கொள்கிறார். பக்தர்களின் ஆரவாரம் பூரித்து எழுகிறது முன்னாலே வைத்தகண் வாங்காது அவனை அள்ளிப் பருகும் பக்தர்களின் பின்னால் அங்கப் பிரதட்சணமும், அடியழித்தலுஞ் செய்யும் அடியார்கள் ஆங்காங்கே முருகன் புகழ் பாடும் அன்பர்கள். அவனும் தன் பன்னிரு திருவிழிகளாலும் எல்லோர்க்கும் அருள் பொழிகின்றான். அருட்சக்தி ஆறுமுகசுவாமி வள்ளி தெய்வானையுடன் அலங்காரமாய் தேரில் பவனி வரும் காட்சி உள்ளத்தைத் தொடும் ஆனந்தமயமானது. சொல்லொணாத துன்பங்களை தினமும் அனுபவித்து வரும் மக்களுக்கு அனைத்து இடர்களும் நீங்கி ஆனந்த வாழ்வு கிடைக்கவேண்டுமென இற்றைநாளில் பிரார்த்திப்போமாக.

நல்லையிலே வந்துதித்தவனே பாவிகள் படும் துன்பத்தைப் போக்கிட இன்றே அருள் செய்திடுக.

தொல்வினை போக்கும் நல்லைக் கந்தன் தேரேறிவந்து தரும் அருட்காட்சி இன்றைய அற்புதக் காட்சி. அவன் அருள் நாடி நாமனைவரும் செல்வோமாக.

## வரும துயர் தகர்த்திடும் வேலே!

சூரசங் காரனே சுப்ரமண்யனே
சுந்தரத் தமிழுக்கு முதலே
வீரமும் தேசநலன்களும் சேர
விநயமாய் வேண்டிடும் மண்ணில்
கோரமும் அசுரர் கொடுமையும் அழித்து
குவலயம் ஒளிபெறத் தேரில்
ஊர்வலம் வருவாய் உமையவள் மைந்தா
உனைத் தொழும் அடியவர்க் கருள்வாய்!

கானக் குறமகள் வள்ளிதெய் வானையைக்
கவர்ந்த பேரழக னே!
ஞானப் பொருளே அவ்வைக்குச் சுட்ட
நாவற் கனிதந்த சிறுசே
வானவர் கோனே வண்ண மயிலோனே
வரும் துயர்தகர்த்திடும் வேலே
தினக் குரலெடுத் தேங்குவர் துயரம்
தீய்த்திடத் தேரினில் விரைவாய்

தொல்லைகள் நீங்கத் தோற்றிய ஆறு
முகங்களின் தத்துவம் விளங்க
அல்லல்கள் தீர்க்கும் சரவணப் பொருளின்
ஆற்றலும் பாரினில் துலங்க
எல்லையில்லா அன்புக் கருணையின் கடலுன்
எழில்தனைக் காண வந்தோர்க்கு
நல்லருள் தரவே நன்மைகள் பெறவே
நாயகன் நீ தேரினில் வருக!

— நெடுந்தீவு லக்ஸ்மன்.

(இன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் ரதோற்சவம்)

ஆண்கள், பெண்களுக்கான
ஆடைகளை
நவீன முறையில் தைப்பதற்கு
சிறந்த ஸ்தாபனம்

"எழிலியல் தையலகம்"
காங்கேசன்துறை வீதி,
தாவடி.

நல்லூரான் திருவருளை நாடுகின்றோம்!
குறைந்த செலவில் நிறைவான
உணவாகவும், போஷாக்குக்
குறையை நீக்கவும் - பாவியுங்கள்

"ஜீவாகாரம்"
100 கிறும் ஜீவாகாரத்தில் 17 கிறும் புரதமும்
400 கிலோ கலோரி சக்தியுமுண்டு. உங்கள்
தேவைக்கு ஏற்ப தொகையாகவும் சில்லறை
யாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

அண்ணா தொழிலகம்
இணுவில்.

நல்லூர் கந்தனை நம்பி
நலம் பல பெறுவோம்.

★ சகலவித புடவைத் தினுசுகளுக்கும்
★ தையல் உடை வகைகளுக்கும்
★ ஆண் பெண் குழந்தைகளுக்கான
றெடிமேட் ஆடைகளுக்கும்

"மகராசி ரெக்ஸ்"
சுன்னாகம் சந்தி,
சுன்னாகம்.

வல்வினை தீர்க்கும்
வள்ளி மணாளா,
துயர்தீர்க்க வருக! வருக!!

"சக்தி மருந்தகம்"
காங்கேசன் துறை வீதி,
சுன்னாகம்.

நல்லூர்க் கந்தா - நல்லருள்புரிவாய்
உட்புற வெளிப்புற
படப்பிடிப்பாளர்கள்

"தாசன் ஸ்ருடியோ"
(தெல்லிப்பழை)
கே. கே. எஸ். வீதி.
இணுவில்.

கூறுமடியார் வினைதீர்க்கும் குகனே
தீரா வினைகள் தீர்த்தருள்வாய்,
எல்லா மகளிருக்கும் ஏற்றவாறு
சிறந்த முறையில் உள்ளாடைகள்
தைத்து வழங்குபவர்கள்.

"எழில் தையலகம்"
சேர்ச் லேன், கொக்குவில்.

வண்ணத் தேரேறி வரும்
வள்ளி மணாளன் அருள்
கிடைக்கட்டும்

"சுன்னாகம்
பல நோக்குக் கூட்டுறவுச்
சங்கம்"
சுன்னாகம்

நல்லூர்க் கந்தன் காலடியை
வணங்குகின்றோம்

டயமன் றேடேஸ்
12, டாக்டர் சுப்பிரமணியம் வீதி
சுன்னாகம்.

### "அரசுக்கு எதிராக ———

# சண்டைபிடிப்பதைத்தவிர தமிழருக்கு வேறுவழியில்லை"

## பேராசிரியர் சிவத்தம்பி பேட்டி

(சென்னை)

"சிறிலங்காஅரசுக்கு எதிராக ஈழத் தமிழ் மக்களுக்கு சண்டை பிடிப்பதைத் தவிர வேறுவழியில்லை" என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி இந்தியப் பத்திரிகையொன்றுக்கு அண்மையில் வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது: "அரசுக்கு எதிராக நடத்தப்படும் சண்டையில் ஈழத் தமிழ் மக்களை தோற்கடிக்க முடியாது ஆயுதங்களைப் போட்டுவிட்டு வரமுடியாத அறநிர்ப்பந்தம் புலிகளுக்கு உண்டு

இலங்கை இராணுவம் தற்போது அரசியல் பேசத் தொடங்கி விட்டது. சிங்களத் தேசிய உணர்வுகளை கூர்மழுங்காமல் காப்பாற்றிவரும்புத்த பிக்குமார்ன் மகாசங்க ஒதுக்கல்வாதத்துக்கு ஒத்து ஊதுபவர்களாக இராணுவத்தினர் மாறி விட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி)

## படையினரிடம் சிக்கிய 4 பொதுமக்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்திடம் அகப்பட்டுக் கொண்ட 40 பேரில் நால்வர் நேற்று முனதினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்

இவர்களில் ஒரு வயோதிபர் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகிய நிலையில் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இப்பகுதியில் தடுத்துவைக்கப்பட்டவர்களை வீடுகளுக்குச் சென்று சமைத்துச் சாப்பிடுமாறு படையினர் பணித்துள்ளதாகவும் எச்சரிக்கை, மிரட்டல்களுக்கு மத்தியில் தான் தாம விடுவிக்கப்பட்டதாகவும் அந்த வயோதிபர் தெரிவித்தார். (56-ரி)

## தீவகத்திலிருந்து நால்வர் அழைத்துவரப்பட்டனர்

(உடுப்பிட்டி)

தீவகத்திலிருந்து குமாரி கப்பல் மூலம் நால்வர் பருத்தித் துறைத் துறைமுகத்துக்கு நேற்றுப் பகல் 11 மணியளவில் வந்தடைந்தனர்.

அனலைதீவு நயினாதீவு பகுதியிலிருந்து உறவினரை பார்ப்பதற்காகவும் ஆலய வழிபாட்டுக்காகச் சென்ற பூசகர்களுமே அழைந்து வரப்பட்டன.

இவர்கள் சாரை நகரிலிருந்து கடற்படையினரின் படகில் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் அனுசரணையுடன் காங்கேசன்துறைக்கு கொண்டு வரப்பட்டு பின்னர் குமாரி கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகம்வரை அழைத்து வரப்பட்டனர். (150)

அலம்பில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்படி மோதலில் 5 படையினர் பலியானதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே. (சு-க.ரி)

## ஈழத் தமிழர் விவகாரம்:

# இந்திய மத்திய, மாநில அரசுகள் கடும் போக்கு

(சென்னை)

இலங்கை தமிழர்களை தாயகம் திருப்பி அனுப்பும் விடயத்தில் இந்திய மத்திய அரசும் ஜெயலலிதா தலைமையிலான மாநில அரசும் கடும் போக்கை கடைப்பிடித்து வருவதாக முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் சென்னைக்கு விஜயம செய்த அவர் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் தங்கியுள்ள தமிழ்அகதிகளை திருப்பியனுப்பும்விடயத்தில் மனிதாபிமானம் பேணப்பட வேண்டும் என்றும் அவர் வற்புறுத்திக் கூறியுள்ளார். (க)

## புலிகள் — தி. மு. க. தொடர்பு

# கருணாநிதியின் அறிக்கை ஒரு கண்துடைப்பு நாடகம்

(சென்னை)

திராவிடமுன்னேற்ற கழகத்திற்கும் விடுதலை புலிகள் இயக்கத்திற்கும் எதுவித தொடர்பும் கிடையாது என தி மு க தலைவர் கருணாநிதி தெரிவித்திருப்பது ஒரு கண்துடைப்பு நாடகம்என தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஈ. பி. ஆர். எல். எவ். இயக்க தலைவர் பத்மநாபா உட்பட பலர் சென்னையில் கொலை செய்யப்பட்டசம்பவம் குறித்து அன்றைய தி மு க அரசு நடந்து கொண்டவிதம் பற்றி தமிழக மக்கள் நன்கு அறிவர்கள் என்றும் அரசியல மாற்றத்திற்கேற்ப தி மு. க. தலைவர் இவ்வாறு கருத்து தெரிவித்திருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தி. மு. க உறுப்பினர்களான முரசொலிமாறன், வை. கோபாலசமிஆகியோர் மாநிலங்களவையில் ஆற்றும் உரைகள் தி. மு. க. வுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் உள்ள நெருக்கத்தை புலப்படுத்துகின்றது என்றும் குறிப்பிட்டார். (க.ரி)

## பாதுகாப்பு கோரவில்லை

(கொழும்பு)

சுப்ரீம் கோட் நீதியரசர்களுக்கு மேலதிகப் பாதுகாப்புவழங்கவுள்ளதாக வெளிவந்த செய்திகளை 'சுப்ரீம் கோட்' முற்றாக மறுத்துள்ளது.

இவ்வாறு நீதியரசர்கள் எதனையும் கோரவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (சு-ரி)

## படைமுகாம்சென்ற தமிழர் தடுத்துவைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தேற்றாத்தீவில் சிறிலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்ட 17 தமிழர் தொடர்பாக விபரம் அறியும் பொருட்டு இராணுவமுகாமிற்கு சென்ற தமிழர் டலர் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேற்றாதீவு, கொம்மாந்துறை, மொறக்கொட்டாஞ்சேனை போன்ற இடங்களிலிருந்து கடந்த வாரம் 17 தமிழர்கள் ஸ்ரீ லங்காப்படையினரால் கைது செய்யப்பட்டது தெரிந்ததே. (க)

போலிஸ்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக்கப்படுவதும், பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப் படுத் துன்புறுத்தப்படுதல் போன்ற வன்செயல்கள் அண்மையில் அதிகரித்துவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. [க]

## அகதி முகாம்கள் மீது ஜேர்மனியில் தாக்குதல்

(பேர்லின்)

ஜேர்மனியின் வட-கிழக்குத் துறைமுக நகரான ரொஸ்ரொக்கில் உள்ள அகதி முகாம், சுய அமைப்பு 'வலது சாரி' குழுவினால் தீயிடப்பட்டும், அகதிகள் பலர் சடுமையாகத் தாக்கப்பட்டு இம்சிக்கப்பட்டதாவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதிகள் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதல் ஜேர்மன் நாட்டுக்கு இழுக்கைத் தேடித்தரும் அவமானச் செயலென ஜேர்மன் கூட்டரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

இத்தகைய கொடூரச் சம்பவங்களுக்கு எதிர்க்கட்சியான சோஷல் டெமோகிரட்டிக் கட்சியே பொறுப்பென ஜேர்மன் உள்துறை அமைச்சர் ரூடோல்ப் பீற்றர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்சியே ஜேர்மன் நோக்கி வரும் அகதிகளுக்கு புகலிடம் மறுக்கப்படவேண்டும் என்று கோரிப்போராடி வருவதும் குறிப்பிடத்தக்கது. [க]

## பண்டத்தரிப்பு கல்வி கோட்ட அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அலுவலகம் இன்று புதன்கிழமை தொடக்கம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. [சு]

## இன்று யாழோசை இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லைககந்தன் உற்சவத்தை யொட்டி 'யாழோசை' மன்றம் வழங்கும் இசைவிழா 3ம் நாள் நிகழ்ச்சி நல்லை ஆதீனத்தில் இன்று 6-30 மணிக்கு நடைபெறும்.

தலைமையுரை, சிறப்புரையைத் தொடர்ந்து நடைபெறும் வீணைகான இசைத் தொகுப்பை வீணா விஹார் மனற ஆசிரியை விஜயலட்சுமி சண்முகராஜா நிகழத்துவார். எஸ். நாகராஜன்-மிருதங்கம், சதாவேல்மாறன்-கடம். 7-45 மணிக்கு வயலின் சோலோ பா. கண்ணன் - வயலின், சி. துரைராஜா - மிருதங்கம், பி. வரதன், சதாவேல் மாறன்- தபேலா, எஸ். சபேசன்- தவில், வர்ணராமேஸ்வரன்-கடம். (சி-158)

இனப்பிரச்னையை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பொறுப்பு ஜனதிபதி பிரேமதாஸ் விடமே தங்கியுள்ளது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினாலோ அல்லது சர்வ கட்சி மாநாட்டினாலோ இந்தப்பிரச்னைக்கு தீர்வுகாண முடியாது என்றும் இனப்பிரச்னையை ஜனதிபதி பிரேமதாஸவே தீர்த்துவைக்கவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ரி)

ஈழ அகதிகளுக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்தே மேற்படி பண உதவி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பணத்தின் அரைவாசிப் பகுதி, ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் மூலமும், மிகுதிப் பணம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமும் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [க-ரி]

தொடரும்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அமைதியற்ற நிலை மட்டுமல்ல, பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டுள்ளதாகப் பொருளியல் நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியினால் அரசுக்கு எதிராக விரக்தி ஏற்படும் நிலைக்குப் பொதுமக்கள் தள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

மட்டு. மாவட்டத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் பல சலகூட வசதிகள். குடிநீர், பால்மா மற்றும் உடுபிடவைகள் போன்றவை இன்றி பெரிதும் கஷ்டம் அனுபவித்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இம்மாவட்டத்தில் உள்ள 28 அகதி முகாம்களில் 2,438 குடும்பங்கள் தங்கியிருப்பதாகவும் 15,860 குடும்பங்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாகவும் தொழில் வசதி, கல்வி மற்றும் அடிப்படை வசதிகள் இன்றி இவ்வகதிகள் துன்புறுவதாகவும் இடம் பெயர்ந்த அரச ஊழியர்கள் சம்பளத்தையும் ஓய்வூதியத்தையுமே நம்பி வாழவதாகவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. [க]

## வீடமைப்பு கடன்

## சலுகை காலம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய வீடமைப்புத் திணைக்களத்திலிருந்து முன்னர் கடன்களைப் பெற்றவர்கள் அதனை மீளச் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட சலுகைகள் எதிர்வரும் அக்டோபர் 31-ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாக மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மீளச் செலுத்தப்பட வேண்டிய முழுத்தொகையையும் (முதலும், வட்டியும் மாத்திரம் ஒரே தடவையில் செலுத்துவோருக்கு 10 சதவீத கழிவு வழங்கப்படும் என்றும தவணை தப்பிய அறவீடுகளுக்கான தண்டப்பணம் அறவிடப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

புலிகளுக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கைவிடாது என்றும் தம்மையும் தமது கட்சியையும் இழிவு படுத்தும் விதத்தில் அரசியல் எதிரிகள் பல குற்றச்சாட்டுகளை சுமத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாரிஸிலும், சிங்கப்பூரிலும் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளை தமது கட்சிப் பிரதிநிதிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களையும் அவர் மறுத்துள்ளார்.

மேலும்சமீபகாலமாக விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தமான எந்த ஒரு அறிவுறுத்தலையும் மத்திய அரசு தமிழக அரசுக்கு விடுக்கவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-ரி)

பரீட்சை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சையின் யாழ். மாவட்ட முடிவுகளை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

விரைவில் இப்பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-ரி)

கலிபர்

1ம் பக்கத் தொடர்ச்சி)

இரவோடிரவாக வெளியேறி பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் தஞ்சமடைந்து, அன்றைய இரவுப் பொழுதை அச்சத்துடன் கழித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தார் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 25இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/